கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு - தேசிய மொழிகள் மற்றும் சமூக விஞ்ஞானக்கிளை

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2025
## முன்னோடி வினாத்தாள்

දේශපාලන විද්‍යාව I
அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

| 23 | T | I |
|---|---|---|

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

சுட்டெண் : …………………………………….

**அறிவுறுத்தல்கள்**

* இவ்வினத்தாள் **A, B** ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
* பகுதி **A** பல்தேர்வு வினாக்கள் **30** இனையும் பகுதி **B** குறு வினாக்கள் **20** இனையும் கொண்டுள்ளன.
* **சகல** வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளியே எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்குமான விடையினை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
* ஒவ்வொரு வினாக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| பக்க இல | வினா இல | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | 1 - 2 | |
| 2. | 3 - 9 | |
| 3. | 10 - 16 | |
| 4. | 17 - 22 | |
| 5. | 23 - 30 | |
| 6. | 31 - 38 | |
| 7. | 39 - 45 | |
| 8. | 46 - 50 | |
| | மொத்தம் | |

| | கையொப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

## பகுதி A

- 1 தொடக்கம் 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான** அல்லது **மிகவும் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து, அந்த இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டில் மீது எழுதுக.

01. அரசியல்
    (1) அரச அதிகாரத்துடன் தொடர்புடைய ஒரு செயன்முறையாகும்.
    (2) அரசியல்வாதிகள் தங்கள் அதிகாரத்தை ஒருங்கிணைக்கப் பயன்படுத்தும் ஒரு வழிமுறையாகும்.
    (3) அரசாங்கத்திற்குள் நடைபெறும் செயற்பாடுகளாகும்.
    (4) அரசு, அதன் நிறுவனங்கள் மற்றும் சமூகத்திற்கு இடையிலான தொடர்புக் கோளமாகும்.
    (5) சர்வதேச அமைப்பில் அரசுகளின் நடத்தையை விவரிக்கும் ஒரு கருத்தாகும். (......)

[பக் 2 ஐப் பார்க்க]

02. அரசியல் விஞ்ஞான ஆய்வுக்கான அணுகுமுறைகள்
(1) விஞ்ஞான முறைமூலம் பொது முடிவுகளை எட்டுவதாகும்.
(2) ஒப்பீட்டு அணுகுமுறை பெறுமானங்கள், தீர்ப்புகள் மற்றும் அனுமானங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளதாகும்.
(3) அனுபவ ஆய்வின் அடிப்படையில் அரசியல் பொருளியல் அணுகுமுறையில் இவ்வாய்வு நடத்தப்படுவதாகும்.
(4) அறிவை ஆராயும் ஒரு செயற்பாட்டு அணுகுமுறையாக தத்துவார்த்த அணுகுமுறையை அடையாளம் காணலாம்.
(5) துறையிடைசார் கோட்பாடுகள், கருத்துக்கள் மற்றும் முறைகளின் பயன்பாடு என்பன பன்மைத்துவ அணுகுமுறை மூலம் செய்யப்படுகிறது.

(......)

03. அரசாங்கங்கள்
(1) பழைமையான அரசியல் சிந்தனையில், இது அரசிலிருந்து தனித்து பயன்படுத்தப்பட்டது.
(2) நீண்ட காலமாக நிலையானதாக இருக்கும் சமூகத்தின் மிக அடிப்படையான அரசியல் கட்டமைப்பு.
(3) ஜனநாயகமான முறையில் இருப்பது கட்டாயமாகும்.
(4) நவீன காலத்திற்கு முந்தைய காலத்தில், அது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது.
(5) அரசின் இறைமையை செயற்படுத்தும் கட்டமைப்பாகும். (......)

04. அரசியல் கருத்தியல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விவரிப்புடன் சரியாக பொருந்தும் கூற்றைத் தெரிவு செய்க.

(1) அரசியல் கட்சிகள் - பொதுவான கொள்கைகளுடன் தேர்தல்கள் மூலம் மட்டுமே அதிகாரத்தைப் பெற செயற்படும் ஒரு நிறுவனம்.
(2) அமுக்கக் குழுக்கள் - அரசாங்கத்தின் உள்ளகச் செயற்பாடுகளில் தலையிடுவதன் மூலம் அழுத்தம் கொடுப்பதை பிரதான நோக்காகக் கொண்டதாகும்.
(3) சிவில் சமூகம் - அரசுக்குள்ளே மட்டுமின்றி, அதற்கு அப்பாலும் செயற்படும்.
(4) அரசியல் கோட்பாடு - சமூக விஞ்ஞானத்திலும் மற்றும் தூய விஞ்ஞானத்திலும் துல்லியமாக அடையாளம் காணமுடியும்.
(5) அரசியல் தத்துவம் - பொதுவான ஒருமித்த கருத்துடன் சர்ச்சைகளுக்கு உட்படாததொரு நிலையான கருத்தியலாகும்.

(......)

05. பாசிச அரசுகள்
(1) மக்களே அரசின் அடிப்படை என குறிப்பிடுகிறது.
(2) அரசின் அதிகாரம் வரம்பற்றது மற்றும் சர்வ வல்லமை வாய்ந்தது என்கிறது.
(3) அரசினை ஒரு சமூக கட்டமைப்பாகக் கருதுகிறது.
(4) இராணுவவாதத்தை விடவும் இனவாத்தை நிராகரிக்கிறது.
(5) தனியாள் விடுதலைக்கு அரசியல் பங்குபற்றலின் அவசியத்தை வலியுறுத்துகிறது. (......)

06. சமஷ்டி அரசியலமைப்பு
(1) ஒரே அரசிற்குள் காணப்படும் அரசாங்கங்களுக்கு இடையே நிர்வாக அதிகாரத்தை ஒருங்கிணைக்கும் ஒரு முறையாகும்.
(2) சட்டமன்றத்தால் இயற்றப்படும் ஒரு சட்டத்தின் மூலம் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும் ஒரு முறையாகும்.
(3) பெரிய மற்றும் ஒரே தன்மையான அரசுகளில் மாத்திரமே செயற்படுத்தக்கூடிய ஒரு முறையாகும்.
(4) மத்திய அரசுக்கு மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்காக இரண்டாம் மன்றம் என்ற அம்சத்தைப் பயன்படுத்தும் ஒரு முறையாகும்.
(5) பிராந்திய அலகுகள் எப்போதும் மத்திய அரசின் செல்வாக்கிற்கு உட்பட்டவையாக செயற்படும் ஒரு முறையாகும். (......)

07. பாராளுமன்ற அரசாங்கத்தில்
(1) சட்டத்துறை மற்றும் நிர்வாகத்துறையின் பதவிக்காலம் ஒரே சந்தர்ப்பத்தில் நிறைவடையும்.
(2) அரசின் தலைவர் மற்றும் அரசாங்கத்தின் தலைவர் ஆகிய பதவிகள் என்பன ஒரே நபரால் வகிக்கப்படும்.
(3) பல்லின சமூகங்களின் தேசிய ஒற்றுமையை உருவாக்குவதற்கான ஒரு வழிமுறையாகும்.
(4) அவசரகால நிலைகள் மற்றும் நெருக்கடிகளுக்கு உடனடியாக பதிலை வழங்கக்கூடியதாகும்.
(5) நிர்வாகத்துறையை பதவி விலக்குவதற்கான வாய்ப்பு மக்களுக்கேயன்றி சட்டமன்றத்திற்கு உரியதாகாது.

(......)

[பக் 3 ஐப் பார்க்க]

08. மோதல் தீர்வு செயன்முறைகளில்
(1) மோதல் தடுப்பின் ஆரம்ப படிநிலை மோதல் முகாமைத்துவமாகும்.
(2) மோதலுக்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளை வழங்குவது எளிமையான தடுப்பாகும்.
(3) மோதலின் தன்மை, நோக்கங்கள் மற்றும் அபிலாஷைகளை மாற்றுவது மோதல் பரிநிலைமாற்றமாகும்.
(4) மோதலை சமாதான ஒப்பந்தம் அல்லது போரை முடிவுக்குக் கொண்டுவருவதன் மூலம் முழுமையாக தீர்க்க முடியும்.
(5) மோதலை முழுமையாகத் தீர்ப்பது மிகவும் இலகுவானதும் மற்றும் எளிமையானதுமான செயன்முறையாகும்.
(......)

09. தேசியவாதம்
(1) அரசியல் ரீதியாகவும் தத்துவ ரீதியாகவும் சக்திவாய்ந்ததொரு கருத்தியலாகும்.
(2) இரண்டு முக்கிய அணுகுமுறைகளின் கீழ் அடையாளம் காணப்படுகிறது.
(3) இனத்துவ தேசியவாதம் என்பது இதன் மரபு ரீதியான வடிவமாகும்.
(4) மொழி, மதம் மற்றும் கலாசாரம் போன்ற கூறுகளின் அடிப்படையில் தனித்தனியாக சிந்திக்க நமக்குக் கற்பிக்கிறது.
(5) ஒரு குறிப்பிட்ட சிந்தனையாளர் அல்லது தத்துவஞானியுடன் அடையாளம் காணப்படுவதில்லை.
(......)

10. சர்வதேச அரசியலில்
(1) குறிப்பிட்ட அதிகாரம் கொண்ட அரசாங்கங்களைக் கொண்டுள்ளது.
(2) தற்போது, இருதுருவ உலக கட்டமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.
(3) இது போரை விட சமாதானத்தை ஆதரிக்கிறது.
(4) பிராந்திய கட்டமைப்புகளின் தாக்கம் சிறியதாக உள்ளது.
(5) வெளிக்காரணிகள் அதன் தீர்மானத்தில் அதிக செல்வாக்கைச் செலுத்தவில்லை. (......)

11. பொதுக் கொள்கைகள்
(1) குறிப்பிட்ட குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளன.
(2) மக்களின் பொது மற்றும் தனிப்பட்ட பிரச்சினைகளை நிவர்த்தி செய்கின்றன.
(3) நடைமுறைப்படுத்தல் என்பது அரசியல்வாதிகளின் பணியாகும்.
(4) பொருளாதாரத் துறையில் சிறப்பு கவனம் செலுத்துகிறது.
(5) அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களில் கவனம் செலுத்தாதது. (......)

12. சட்டத்தின் ஆட்சிக்கு மிகவும் **பொருத்தமான** கூற்று
(1) இது ஒரு நாட்டின் ஜனநாயகத்தின் ஆரோக்கியத்தை பலவீனப்படுத்துகிறது.
(2) இயற்கை சட்டம் மற்றும் நிர்வாகச் சட்டங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது.
(3) பிளேட்டோவின் சிறந்த ஆட்சியாளர் சட்டத்திற்குக் கீழ்ப்படிகிறார்.
(4) இது அரசியலமைப்புடன் நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது.
(5) 'சட்டம் என்பது அரசை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்' என்பது அமெரிக்க எண்ணக்கருவாகும்.
(......)

13. சமூக ஜனநாயகம்
(1) பாட்டாளி வர்க்க சர்வாதிகாரங்களின் மாதிரியாக மாறியுள்ளது.
(2) பொருளாதாரத் துறையிலிருந்து அரசு விலகியிருப்பதை ஏற்றுக்கொண்டுள்ளது.
(3) பாட்டாளி வர்க்கப் புரட்சி என்ற கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.
(4) கூட்டுப் பேரம்பேசுதலிலிருந்து சமூக நலனை ஏற்றுக்கொண்டுள்ளது.
(5) நவதாராளவாத பொருளாதார பண்புகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது. (......)

14. நாட்டையும் அதன் அரசாங்க பண்புகளையும் சரியாக விவரிக்கும் கூற்றைத் தெரிவு செய்க.
(1) அமெரிக்கா - அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் நீதிப்புனராய்வு அதிகாரத்தை நேரடியாக வழங்கியுள்ளது.
(2) பிரித்தானியா - நீண்டகால பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகளுக்கு சட்ட அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.
(3) இந்தியா - அரசியலமைப்பின் மூலம் கூட்டாட்சி நிலையினை நேரடியாக அறிவித்துள்ளது.
(4) பிரான்ஸ் - சார்லஸ் டி கோல் அவர்களால் பாராளுமன்ற அரசாங்க முறையை உருவாக்குவதற்கான அடித்தளத்தை வழங்கினார்.
(5) சுவிட்சர்லாந்து - கூட்டாட்சி அரசியலமைப்பின் முதலாம் பிரிவின்படி, 26 முழு கன்டன்களையும் 6 அரைக் கன்டன்களையும் நடைமுறையில் கொண்டுண்டுள்ளது.
(......)

15. பிரான்ஸ் அரசியலமைப்பு
 (1) அரசியல் அதிகாரத்தை பரவலாக்கத்திற்கு உட்படுத்தியுள்ளது.
 (2) ஒற்றையாட்சி அரசாக இருப்பதால், சட்டமன்றம் ஒரு சபையைக் கொண்டுள்ளது.
 (3) அமைச்சரவை சட்டமன்றத்திலிருந்து ஜனாதிபதியால் தெரிவுசெய்யப்படுகிறது.
 (4) நீதித்துறையின் சுதந்திரத்தினை பாதுகாப்பதிலும் பராமரிப்பதிலும் ஜனாதிபதியை பொறுப்பானவராக்கியுள்ளது.
 (5) உப தேசிய அரசாங்கங்கள் பிராந்தியங்கள் மற்றும் கம்யூன்களின் கீழ் மட்டுமே ஒழுங்கமைத்துள்ளது. (......)

16. சர்வதேச அரசியலில் அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பது,
 (1) செஞ்சிலுவை சங்கமாகும்.
 (2) சார்க் அமைப்பாகும்.
 (3) ஐரோப்பிய சங்கமாகும்.
 (4) வட அத்திலாந்திக் உடன்பாட்டு அமைப்பு
 (5) சர்வதேச நாணய நிதியம். (......)

17. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை,
 (1) சுதந்திரம் பெருவதற்கு முன்னரே மிகவும் முறையான வகையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.
 (2) சமூகத்திலுள்ள மக்களின் கருத்துக்கள் வெளிநாட்டுக் கொள்கையை ஒழுங்கமைப்பதில் செல்வாக்கு செலுத்துவதில்லை.
 (3) உள்ளக சமூக - அரசியல் மற்றும் பொருளாதார அசைவுகளிலிருந்து சுயாதீனமாகக் காணப்படுகின்றது.
 (4) பிராந்திய மற்றும் சர்வதேச அதிகார சமநிலைகளால் தீர்மானிக்கப்படவில்லை.
 (5) புவிசார் அரசியல் அமைவிடம் என்பது தவிர்க்க முடியாததொரு காரணியாக மாறியுள்ளது. (......)

18. இறைமை
 (1) பெரிய மற்றும் சிறிய அரசுகளுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகளை அங்கீகரிக்கிறது.
 (2) அரசின் விருப்பத்தை செயற்படுத்துவதற்கான சட்டபூர்வமான தன்மையை வழங்குகிறது.
 (3) உலகமயமாக்கலால் வலுவடைந்துள்ளது.
 (4) பல்தேசிய நிறுவனங்களின் செல்வாக்கிற்கு உட்பட்ட ஒன்றல்ல.
 (5) அரசின் எல்லைகளுக்குள்ளும் அதற்கு அப்பாலும் பயன்படுத்தப்படலாம். (......)

19. குடியரசுவாதம்
 (1) இது முடியாட்சிக்கு முற்றிலும் எதிரானதொரு கருத்தியலாகும்.
 (2) இது இறைமை அதிகாரத்தின் உரிமையாளர் ஆட்சியாளர் என்கிறது.
 (3) இது தாராளவாதத்திற்கு மாற்றீடாக உருவாக்கப்பட்டுள்ளது.
 (4) அரசின் தலைவர் மக்கள் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதை இது ஏற்றுக்கொள்ளவில்லை.
 (5) அரசியல் ஆதிக்கத்துடன் சுதந்திரம் அடையப்பட வேண்டும் என்பதை இது ஏற்றுக்கொள்கிறது. (......)

20. அதிகாரப் பகிர்வு
 (1) ஒதுக்கப்பட்ட அதிகாரங்களை அரசாங்கத்தின் ஒரு துறை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பதை இது குறிக்கிறது
 (2) இதனை பாராளுமன்ற கட்டமைப்பில் சிறப்பாக செயற்படுத்தப்படலாம்.
 (3) அதிகார குவிப்பு ஊழலுக்கு வழிவகுக்காது என்பதை இது வலியுறுத்துகிறது.
 (4) தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்,சர்வதிகார முடியாட்சிக்கு மாற்றீடாகவும் இது முன்மொழியப்படுகிறது.
 (5) இது அமெரிக்க அரசியலமைப்பை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது. (......)

- **21** தொடக்கம் **25** வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூற்றுக்களில் இருந்து **சரியான கூற்றுத் தொகுதியினைக்** கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

21. கோல்புறூக் ஆணைக்குழு,
 A - வழங்கப்பட்டப் பரிந்துரைகள், பிரித்தானியாவின் கைத்தொழில் புரட்சியுடன் உருவாகிய கருத்துக்களின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தது.
 B - அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட அனைத்து விதமான வர்த்தக முதலீடுகளையும் எதிர்த்தது.
 C - இலங்கைக்கு வரும்போது இந்நாட்டில் மூன்று வகையான நிர்வாகக் கட்டமைப்புகள் காணப்பட்டன.
 D - முன்மொழியப்பட்ட பரிந்துரைகள் 'சட்டத்தின் ஆட்சி' என்பதை செயற்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகும்.
 E - முன்மொழியப்பட்ட சட்டக் கழகத்திற்கு வரவு – செலவு தொடர்பான அதிகாரங்கள் கொண்டிருந்தது.
 (1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

22. டொனமூர் சீர்திருத்தங்கள்

A - லண்டன் நகராட்சி முறைக்கு இணையானது.

B - இதன் கீழ், அரசியலமைப்பு கட்டமைப்பின் பிரதான அம்சம் நிர்வாகக் குழு முறையாகும்.

C - ஒரு சக்திவாய்ந்த அரசியல் இயக்கத்தால் வழிநடத்தப்படாமலே இலங்கையர்களுக்கு சர்வசன வாக்குரிமை வழங்கியது.

D - இதன் கீழ், சட்டமூலமொன்றை சட்டமாக்காது மசோதாவைத் தடுத்து வைக்கும் அதிகாரம் ஆளுநருக்கு இருந்தது.

E - எந்தவொரு நிர்வாகக் குழு கூட்டத்திலும் தனது பதவிநிலையினை அடிப்படையாகக் கொண்டு தலையிடவும் வாக்களிக்கவும் பொதுச்செயலாளருக்கு அதிகாரம் இருந்தது

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

23. சோல்பரி அரசியலமைப்பு

A - அதன் செயற்பாட்டுக் காலத்தில் அரசியலமைப்பில் ஏழு திருத்தங்கள் செய்யப்பட்டன

B - இது 1944 அமைச்சரவை மசோதாவை பெரும்பாலும் ஒத்திருந்தது.

C - சட்டப்பூர்வமாக, இது பிரித்தானிய அமைச்சரவை அரசியலமைப்பின் அரசாங்க வடிவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது

D - அதன் சட்டக் கட்டமைப்பானது, பிரித்தானிய பாராளுமன்ற விதிமுறைகள், நிர்வாக கட்டமைப்பு போன்றவற்றுடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருந்தன.

E - இது பல்லின சமூகமொன்றின் தேவைகளை இனங்கண்டிருந்தது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

24. 1972 ஆம் ஆண்டின் முதலாம் குடியரசு அரசியலமைப்பு

A - வெஸ்ட்மின்ஸ்டர் முடியாட்சியை முறையை நீக்கி இலங்கையில் ஒரு குடியரசு கட்டமைப்பை உருவாக்கியது.

B - அதிகாரங்களைப் பகிர்தல் என்ற கருத்துக்கு மாறாக, கொள்கையளவில் அதிகாரங்களின் குவிப்பு என்ற கருத்துக்கு இணங்கி செயற்பட்டது.

C - ஒரு மசோதாவின் அரசியலமைப்புத் தன்மை தொடர்பில் அரசியலமைப்பு நீதிமன்றம் வழங்கும் எந்தவொரு முடிவையும் தேசிய அரசுப் பேரவை ஏற்றுக்கொண்டு செயற்படுத்த வேண்டியிருந்தது.

D - ஒரு மசோதாவை சட்டமாக்கிக் கொள்வதற்கு பெயரளவிலான நிர்வாகத்தின் ஒப்புதல் அவசியமில்லை.

E - அரசுக் கொள்கை வழிகாட்டும் கோட்பாடுகள் புதியதொரு அங்கமாக இருந்தது.

(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

24. இலங்கையின் அரசியல் கட்சிகள் தொடர்பில் சரியான கூற்றுக்கள்,

A - இலங்கையில் முதலாவதும், நவீனமானதும் மற்றும் நீண்டகால நிலைப்பினைக் கொண்ட அரசியல் கட்சி லங்கா சம சமாஜ்வாடி கட்சியாகும்.

B - இலங்கை சுதந்திரக் கட்சியின் கருத்தியல் தேசியவாதம் மற்றும் மூன்றாம் உலக சோசலிசத்தின் கலப்பாகும்.

C - 1960 களின் நடுப்பகுதியில் இலங்கையில் இடதுசாரி இயக்கங்களில் 'பழைய இடது' மற்றும் 'புதிய இடது' என இரண்டு பிரிவுகள் தோற்றம் பெற்றன.

D - இலங்கையில் தற்போது இரு கட்சி முறை நடைமுறையில் காணப்படுகிறது.

E - ஆயுதப் போராட்டத்தின் மூலம் அரச அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்ற ஒரே இடதுசாரி அரசியல் கட்சி மக்கள் விடுதலை முன்னணியாகும்.

(1) ABCD (2)ABCE (3)ABDE (4)ACDE (5)BCDE (......)

- 26 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு இரு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூற்றுத் தொடர்பிலும் வழங்கப்பட்டுள்ள கூற்றுச் சோடிகளுக்கு மிகவும் பொருந்தும் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) மற்றும் (5) என்ற தெரிவுகளில் பொருத்தமானதை தெரிவுசெய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

[பக் 6 ஐப் பார்க்க]

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| 26. | 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு நிறைவேற்று ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தியது. | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு 1972 அரசியலமைப்பைப் போன்று குடியரசுவாதக் கொள்கையின் அடிப்படையில் காணப்படவில்லை. | (....) |
| 27. | தற்போதைய நிலையில், ஜனாதிபதி தனது சுய விருப்பின்படி அரச உயர் பதவிகளுக்கு தனிநபர்களை நியமிக்க முடியும். | இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ், பிரதமர் எந்த வகையிலேனும் பதவியில் இருந்து விலகும்போது அமைச்சரவை கலையும். | (....) |
| 28. | இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் சட்டத்தால் நிறுவப்படும் அதியுயர் ஆரம்ப நீதிமன்றம் உயர் நீதிமன்றமாகும். | 19 வது திருத்தத்தின் மூலம் பாராளுமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட சட்டமூலங்கள் மீது அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தும் அதிகாரத்தை ஜனாதிபதி பெற்றுள்ளார். | (....) |
| 29. | 1978 அரசியலமைப்பின் பிரிவு 75 இன் படி, கடந்த காலத்தை உள்ளடக்கும் சட்டங்களை ஆக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உண்டு. | ஜனாதிபதி பதவிக்கு தெரிவுசெய்யப் பட விரும்பும் ஒருவர் 30 வயதை பூர்த்தி செய்திருக்க வேண்டும். | (....) |
| 30. | 19 வது திருத்தத்தால் உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் இரண்டின் செயற்பாடுகளை 20 ஆம் திருத்தம் இரத்து செய்தது. | தேசிய பெறுகை ஆணைக்குழு மற்றும் தேசிய கணக்காய்வு ஆணைக்குழு ஆகிய இரண்டு ஆணைக்குழுக்களே அவையாகும். | (....) |

## பகுதி - B

31. ‘அரசியல் என்பது புராதன நகர அரசோடு தொடர்புடையது’ என்ற கிரேக்கக் கருத்தில் இரண்டு அர்த்தங்கள் காணப்பட்டன. அவை **இரண்டையும்** குறிப்பிடுக.
(1) ..........................................................................................................................................
(2) ..........................................................................................................................................

32. (1) சமூக ஜனநாயக சிந்தனையை வடிவமைத்த முக்கிய சிந்தனையாளரின் பெயரைக் குறிப்பிடுக.
..........................................................................................................................................
(2) மூன்றாம் உலக சோசலிசத்தை (Third - World Socialism) முன்வைத்த அறிஞர் ஒருவரின் பெயரைக் குறிப்பிடுக.
..........................................................................................................................................

33. பின்வரும் நூல்களின் ஆசிரியர்களின் பெயரைக் குறிப்பிடுக.
(1) சட்டத்தின் சாரம் - ..........................................................................................................
(2) சமூக ஒப்பந்தம் - ..........................................................................................................

34. சமூகத்தில் காணப்படும் நிறுவனங்களை பிரதானமாக இரு பகுதிகளின் கீழ் அடையாளம் காணலாம். **அவ்விரண்டு** பகுதிகளையும் பெயரிடுக.
(1) ..........................................................................................................................................
(2) ..........................................................................................................................................

35. மோதல் தீர்வு செயற்பாட்டில், ‘சமாததானத்திற்கான நிகழ்ச்சி நிரல்’ (An Agenda for Peace) மற்றும் ‘நிலையான சமாதானம்’ (Sustainable Peace) ஆகிய கருத்துக்கள் முன்வைத்த **இரு** கோட்பாட்டாளர்களையும் ஒழுங்குமுறையில் பெயரிடுக.
(1) ..........................................................................................................................................
(2) ..........................................................................................................................................

36. பொதுக்கொள்கை பற்றிய கற்றல் இரு வகையான தன்மைகளைக் கொண்டுள்ளன. அவை **இரண்டையும்** பெயரிடுக.
(1) ..........................................................................................................................................
(2) ..........................................................................................................................................

37. 1947 ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் பாராளுமன்றத்திற்கு முழுமையான சட்டவாக்க அதிகாரம் காணப்படவில்லை. இதனைப் பாதித்த காரணிகள் **இரண்டை** எழுதுக.
(1) ..........................................................................................................................................
(2) ..........................................................................................................................................

38. இந்திய அரசாங்க அமைப்பில் மாநிலங்களுக்கிடையேயான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு இரண்டு நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. அந்நிறுவனங்கள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக.
(1) ..........................................................................................................................................
(2) ..........................................................................................................................................

39. 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் கீழ் ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் தேர்தல் முறை மூலம் அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் எதிர்பார்த்த **இரண்டு** நோக்கங்களைக் குறிப்பிடுக.
(1) ..........................................................................................................................................
(2) ..........................................................................................................................................

40. மெக்ஸ் வெபர் (Max Weber) வெவ்வேறு சமூகங்களில் காணப்படும் மூன்று வகையான அதிகாரங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் **இரண்டை** எழுதுக.
(1) ..........................................................................................................................................
(2) ..........................................................................................................................................

[பக் 8 ஐப் பார்க்க]

41. நவீன அரசுககளில் வெளியுறவுக் கொள்கையை செயற்படுத்துவதற்கான **இரண்டு** முறைகளை எழுதுக.
(1) ..............................................................................................................................................
(2) ..............................................................................................................................................

42. சோவியத் ரஷ்யா மற்றும் சீனாவின் சோசலிச நிலைப்பாடுகளை பலவீனமடையச்செய்த தலைவர்களின் பெயர்களை ஒழுங்கு முறையில் பெயரிடுக.
(1) ..............................................................................................................................................
(2) ..............................................................................................................................................

43. 1931 டொனமூர் அரசியலமைப்பின் அமைச்சரவை இரண்டு வழிகளில் உருவாக்கப்பட்டது. அவ்வழிகள் **இரண்டையும்** குறிப்பிடுக.
(1) ..............................................................................................................................................
(2) ..............................................................................................................................................

44. தாராளவாத மதச்சார்பின்மையின் **இரு** கொள்கைகளை எழுதுக.
(1) ..............................................................................................................................................
(2) ..............................................................................................................................................

45. பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை வெற்றிகரமாக செயற்படுத்த தேவையான **இரு** முன் நிபந்தனைகளை குறிப்பிடுக.
(1) ..............................................................................................................................................
(2) ..............................................................................................................................................

46. 1978 இல் இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் 19வது திருத்தத்தின் மூலம் சட்டத்துறையில் மேற்கொள்ளப்பட்ட **இரு** மாற்றங்களை எழுதுக.
(1) ..............................................................................................................................................
(2) ..............................................................................................................................................

47. இலங்கை அணிசேரா இயக்கம் மற்றும் பொதுநலவாய உச்சிமாநாடுகளை நடத்திய ஆண்டுகளை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.
(1) ..............................................................................................................................................
(2) ..............................................................................................................................................

48. 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பில் காணக்கூடிய ஜனநாயகத்திற்கு எதிரான **இரண்டு** அம்சங்களைக் குறிப்பிடுக.
(1) ..............................................................................................................................................
(2) ..............................................................................................................................................

49. 1978 அரசியலமைப்பின் படி இடைக்கால ஜனாதிபதிகள் நியமிக்கப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. அவ்வாறு ஜனாதிபதிகள் நியமிக்கப்பட்ட ஆண்டுகளைக் குறிப்பிடுக.
(1) ..............................................................................................................................................
(2) ..............................................................................................................................................

50. பொருளாதார நோக்கங்களை அடைவதற்காக சர்வதேச அரசசார்பு நிறுவனங்களின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள **இரண்டு** நிறுவனங்களைப் பெயரிடுக.
(1) ..............................................................................................................................................
(2) ..............................................................................................................................................

***

கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு - தேசிய மொழிகள் மற்றும் சமூக விஞ்ஞானக்கிளை

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2025**

**முன்னோடி வினாத்தாள்**

දේශපාලන විද්‍යාව II
**அரசியல் விஞ்ஞானம் II**
Political Science II

| 23 | T | II |
|---|---|---|

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**மேலதிக வாசிப்பு நேரத்தை வினாத்தாளை வாசித்து வினாக்களை தெரிவு செய்தகொள்ளவும், விடைகளை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் முறையினை ஒழுங்குப்படுத்திக் கொள்ளவும் பயன்படுத்திக் கொள்க.**

**அறிவுறுத்தல்கள்**
* இவ்வினத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டுள்ளது.
* பகுதி **I** இல் குறைந்தது **ஒரு** வினாவையும், பகுதி **II** இல் குறைந்தது **இரு** வினாக்களையும், பகுதி **III** இல் குறைந்தது **ஒரு** வினாவையும் உள்ளடங்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

01. அரசியல் விஞ்ஞானம் என்பது, அரசு, அரச நிர்வாகம் மற்றும் அரசாட்சிப் பற்றி கற்கும் விஞ்ஞானமாகும். தெளிவுபடுத்துக. (20 புள்ளிகள்)

02. கீழ்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டை** தெளிவுபடுத்துக.

(i). அரசின் வகிபாகம்

(ii). சமவுடைவாத அரசு

(iii). நவ தாரளவாத அரசு

(10 x 2 = 20 புள்ளிகள்)

03. (i). சமஸ்டி அரசு உருவாவதற்கான காரணிகளை சுருக்கமாக குறிப்பிடுக. (05 புள்ளிகள்)
(ii). ஒற்றையாட்சி மற்றும் சமஸ்டி ஆட்சி என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை தெளிவுபடுத்துக. (15 புள்ளிகள்)

## பகுதி II

04. காலனித்துவ ஆட்சிக் காலத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்த்திருத்தங்களால் இந்நாட்டில் ஏற்பட்ட சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பரிமாற்றங்களை கலந்துரையாடுக. (20 புள்ளிகள்)

[பக் 2 ஐ பார்க்க]

05. 'சோல்பரி அரசியல் யாப்பு வெஸ்ட்மினிஸ்டர் முறைக்கு ஏற்ப உருவாக்கப்பட்டதாகும்' கலந்துரையாடுக.

(20 புள்ளிகள்)

06. 1947 சோல்பரி அரசியல் யாப்பு மற்றும் 1972 முதலாம் குடியரசு அரசியல் யாப்புகளை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள தலைப்புகளில் எவையேனும் **இரண்டினை** ஒப்பீட்டு ரீதியாக கலந்துரையாடுக.

(i). பாராளுமன்ற இறைமை

(ii). நீதித்துறை சுயாதீனம்

(iii). பொதுச்சேவை சுயாதீனம்

(iv). நாம நிருவாகி (10 x 2 = 20 புள்ளிகள்)

07. 1978 அரசியல் யாப்பினை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள தலைப்புகளில் ஏதேனும் **இரண்டை** கலந்துரையாடுக.

(i). சனாதிபதி, சட்டவாக்கச் செயன்முறை மற்றும் பாராளுமன்றம்

(ii). அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறிமுறை

(iii). நிறைவேற்றுத்துறை மற்றும் பொதுச்சேவை

(iv). பாராளுமன்றம்

(10 x 2 = 20 புள்ளிகள்)

## பகுதி III

08. கீழுள்ள தலைப்புகளில் எவையேனும் **இரண்டினை** தெளிவுபடுத்துக.

(i). அமெரிக்க அரசியல் யாப்பின் பொதுப் பண்புகள்

(ii). இந்திய சமஸ்டிமுறையின் அடிப்படைகள்

(iii). பிரான்சிய அரசியல் யாப்பின் கீழ் நிர்வாக அதிகாரத்தை பரவலாக்கம் செய்தல்

(10 x 2 = 20 புள்ளிகள்)

09. (i). இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)
(ii). சர்வதேச அரசியலின் சமகாலப் போக்குகளை சுருக்கமாக விவரிக்குக. (10 புள்ளிகள்)

10. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **இரண்டினை** தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக.

(i) மதசார்பின்மைவாதம்
(ii) முரண்பாட்டு வாழ்க்கைச் சக்கரம்
(iii) அரசியல் கட்சிகளின் பணிகள்
(iv) அதிகாரப் பகிர்வு
(v) பொதுக்கொள்கையும் நீதித்துறையும் (புள்ளிகள் 10 x 2 = 20)

***

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

## தேசிய மொழிகள் மற்றும் சமூக விஞ்ஞானக் கிளை

## அரசியல் விஞ்ஞானம் பயிற்சி வினாத்தாள் விடைகள் - 2025

### வினாத்தாள் 1

### A பகுதி

| வினா இல | விடை இல | வினா இல | விடை இல | வினா இல | விடை இல |
|---|---|---|---|---|---|
| 01 | **4** | 11 | **1** | 21 | **1** |
| 02 | **5** | 12 | **4** | 22 | **1** |
| 03 | **5** | 13 | **4** | 23 | **5** |
| 04 | **3** | 14 | **2** | 24 | **3** |
| 05 | **2** | 15 | **4** | 25 | **2** |
| 06 | **4** | 16 | **1** | 26 | **4** |
| 07 | **1** | 17 | **5** | 27 | **3** |
| 08 | **3** | 18 | **2** | 28 | **2** |
| 09 | **5** | 19 | **1** | 29 | **1** |
| 10 | **3** | 20 | **4** | 30 | **5** |

### B பகுதி

31. 1. அரசு மற்றும் அரசாட்சியுடன் தொடர்புடைய விடயம்
2. அரச செயற்பாடுகளில் பிரசைகளின் கடமைகளும் செயற்பாடுகளும்

32. 1. எட்வர்ட் பேன்ஸ்டைன்
2. ஜவகர்லால் நேரு / அப்துல் கமால் நஸார் / ஜுலியஸ் நியராரே

33. 1. சார்ள்ஸ் மொண்டஸ்கியு
2. ஜோன் ஜெக் ரூசோ

34. 1. முறைசார் நிறுவனங்கள்
2. முறைசாரா நிறுவனங்கள்

35. 1. புரோதஸ் புதோஸ்கோலி
2. ஜோன் கல்டுங்

36. 1. கொள்கைசார் கற்றல்
2. கொள்ளைகயினுள் கற்றல்

37. 1. 29(2) ஆம் உறுப்புரையினை திருத்தல் அல்லது நீக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு இல்லாமை.
2. ஏதேனும் சட்டமூலம் யாப்புக்கு முரணானதாயின் அதனை நிராகரிக்கும் அதிகாரம் மறைமுகமாக நீதிமன்றத்திற்குக் காணப்பட்டமை.
3. 1947 இலங்கையின் சுதந்திரச் சட்டத்தின் கீழ் இலங்கையின் வேண்டுகோளின்பேரில் பிரித்தானிய பாராளுமன்றம் சட்டமாக்க முடியும்.

38. 1. உச்ச நீதிமன்றம்
2. மாநிலங்களுக்கான சபை

39. 1. ஜனாதிபதியை தெரிவு செய்யும்போது சிறுபான்மை இனக்குழுக்களுக்கு அர்த்தமுள்ள வகிபாகம் ஒன்று கிடைத்தல் வேண்டும் என்பது

2. வாக்காளர்களின் சரியான பெரும்பான்மையின் அடிப்படையில் தெரிவானவராக ஜனாதிபதி இருத்தல் வேண்டும் என்பது

40. 1. பழைமையான அதிகாரமுறை
2. கவர்ச்சிகர அதிகாரமுறை
3. சட்டசார் பகுத்தறிவு அதிகாரமுறை

41. 1. இராஜதந்திர உறவுகள்
2. வெளிநாட்டு உதவி
3. இராணுவ சக்தி

42. 1. மிகைல் கோர்பச்சேவ்
2. டெங் சியாவோபிங்

43. 1. மூன்று அரசாங்க அதிகாரிகள்
2. நிர்வாகக் குழுவின் 7 தலைவர்கள் (7 உள்ளூர் அமைச்சர்கள்)

44. 1. அரசு மற்றும் திருச்சபையின் நிறுவன ரீதியான வேறுபடுத்தல்
2. அரசு மதத்துடன் தொடர்புபடாமை மற்றும் மத போதனை மற்றும் பிரச்சாரத்தில் ஈடுபடக்கூடாது.
3. அரசு எந்த மதத்தையும் சாராதிருத்தல்.
4. மத சுதந்திரம் என்பது பிரசையின் அடிப்படை உரிமையாகும் என்பதோடு, மேலும் எந்த பிரசையும் மதத்தின் அடிப்படையிலும் பாகுபாடு காட்டக்கூடாது... போன்றவை.

45. 1. கருத்து சுதந்திரம்.
2. சமத்துவம்.
3. பெரும்பான்மை ஆட்சி/மக்கள் ஆட்சி/அரசியலமைப்புவாதம்/சட்டத்தின் ஆட்சி/நீதித்துறை சுதந்திரம்/பொறுப்புள்ள அரசாங்கம்/சுதந்திரமான தேர்தல்கள்/போட்டி அரசியல் கட்சி முறை

46. 1. பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை 6 ஆண்டுகளில் இருந்து 5 ஆண்டுகளாகக் குறைத்தல்
2. பொதுத் தேர்தலுக்குப் பிறகு நாடாளுமன்றத்தின் முதல் கூட்டம் நடைபெற்ற நாளிலிருந்து நான்கரை ஆண்டுகள் கடந்த பின்னர் குடியரசுத் தலைவரால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும்

47. 1. 1976
2. 2013

48. 1. நிறைவேற்று ஜனாதிபதி முறை மற்றும் ஜனாதிபதியிடம் அரசு அதிகாரத்தை அதிகமாக மையப்படுத்துதல்
2. சட்டமன்றத்தையும் நீதித்துறையையும் நிர்வாகத்தின் செல்வாக்கின் கீழ் கொண்டு வருதல்
3. அரசியல் வன்முறை மற்றும் உள்நாட்டுப் போர்
4. சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களின் கொள்கையை மீறுதல்
5. அரசு மற்றும் சிவில் சமூகத்தின் இராணுவமயமாக்கல்
6. அவசரகாலச் சட்டம் மற்றும் அதன் கீழ் அடிப்படை உரிமைகளைப் பறித்தல்
7. மனித உரிமை மீறல்கள்
8. ஆட்சிச் செயற்பாட்டில் ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம்

49. 1. 1993
2. 2022

50. 1. பிரெட்டன் வூட்ஸ் அமைப்புகள்,
2. சர்வதேச நாணய நிதியம்
3. உலக வங்கி வலையமைப்புகள்